**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 2188/ஆ5/2023, நாள்.08.12.2023**

.....

பொருள் பள்ளிக் கல்வி – கல்விசாரா மன்ற செயல்பாடுகள் – சிறார் திரைப்படம் திரையிடுதல் – டிசம்பர் 2023–2024 – அரசு /அரசு நிதியுதவி பெறும் நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 6 முதல் 9–ம் வகுப்பு மாணவர்களுக்கு சிறார் திரைப்படம் திரையிடுதல் – வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் – தொடர்பாக

பார்வை சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.34785/எம்/மன்றம்/2023, நாள். 06.12.2023

.....

பார்வையில் காணும் செயல்முறைகளின் படி 2023–2024ம் கல்வியாண்டில் அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 9–ம் வகுப்பு வரை பயின்று வரும் மாணவர்களுக்கு சிறார் திரைப்படம் திரையிடப்ப ட்டு வருகிறது. மாணவர்கள் தாங்கள் வாழும் சூழலை புரிந்து கொள்ளுதல், பல்வேறு காலாசாரங்களின் தனித்தன்மையை அறிந்து கொள்ளுதல் , பல்வேறு கலாசாரங்களின் தனித்தன்மையினை அறிந்து கொள்ளுதல் , தன்னம்பிக்கை, நட்பு பாராட்டுதல் , குழுவாக இணைந்து செயல்படுதல் , பாலின சமத்துவம் உணர்தல் ஆகிய பண்புநலக்களை அடையாளம் காணுதல் , தங்களிடம் உள்ளார்ந்து புதைந்திருக்கும் படைப்பாற்றலை வெளிக்கொணர செய்தல் ஆகியன இச்சிறார் திரைப்படம் திரையிடுதலின் நோக்கமாக அமைகிறது . மேலும், இத்திரைப்படங்களை கண்ணுறும் மாணவர்களின் விரிசிந்தனை மேம்படுதல் மற்றும் வி மர்சிக்கும் திறன் உள்ளிட்ட பண்புகள் பெற இந்நிகழ்வு தூண்டுகோலாக அமைகிறது.

2023–2024 ம் கல்வியாண்டில் அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 9–ம் வகுப்பு வரை பயின்று வரும் மாணவர்க ள் கண்டுணரும் வகையில் , டிசம்பர் – 2023ஆம் மாதத்திற்கு திரையிடப்படவுள்ள திரைப்படம் **"பன்ட்" Bunt** எனும் தொரியன் மொழி (வசனங்கள் அனைத்தும் தமிழ் துணையுரையுடன் ) திரைப்படம் பள்ளிகளில் திரையிடுதல் சார்பாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பார்வையில் காணும் செயல்முறைகளில் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி செயல்படுமாறு அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் நடுநிலை , உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள்

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்கள்,
அரசு / அரசு நிதியுதவி பெறும் நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல்–

1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலைக் கல்வி / தொடக்கக் கல்வி) வேலூர் மாவட்டம்.
   (இப்பொருள் சார்பாக தனி கவனம் செலுத்தி தொடர் நடவடிக்கை
   மேற்கொள்ள தெரிவிக்கப்படுகிறது.)
3. வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
   மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) மூலமாக
4. உதவி திட்ட அலுவலர், வேலூர் மாவட்டம்.
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)